செய்தி வெளியீடு எண்: 280 நாள்: 13.05.2019

<u>செய்தி வெளியீடு</u>

இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் 39 பாராளுமன்ற தொகுதிகளுக்கான பொதுத் தேர்தலும் 18 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நடைபெறும் என 10.03.2019 அன்று அறிவித்ததை முன்னிட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறைக்கு வரப்பெற்றது.

38 பாராளுமன்ற தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல், 18 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் ஆகியவற்றிற்குரிய வாக்குப்பதிவு கடந்த 18.04.2019 அன்று முடிவுற்றது. எனினும், 4 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் 19.05.2019 அன்று நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட தேர்தல்களுக்கான வாக்கு எண்ணிக்கை 23.05.2019 அன்று நடைபெறும் எனவும், தேர்தல் நடைமுறைகள் 27.05.2019 அன்றுடன் முடிவுக்கு வரும் எனவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. எனவே, தேர்தல் நடைமுறைகள் முடிவுக்கு வரும் வரை அதாவது 27.05.2019 வரை மாநிலம் முழுவதும் தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும் என இந்தியத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9